# P.S. SENIOR SECONDARY SCHOOL, MYLAPORE

## CLASS WORK

## II LANGUAGE - TAMIL

வகுப்பு : 10

03/04/2020 செய்யுள் 2. இரட்டுற மொழிதல்

### சந்தக்கவிமணி தமிழழகனார்



விளக்கம் - இரண்டு + உற + மொழிதல் = இரட்டுற மொழிதல் ஆகும். அதாவது - ஒருசொல்லோ, சொற்றொடரோ இருபொருள் வருமாறு பாடுவது இரட்டுற மொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.

சிலேடை இருவகைப்படும்.

1. செம்மொழிச் சிலேடை

2. பிரிமொழிச் சிலேடை

செம்மொழிச் சிலேடை என்பது ஒரு சொல் அல்லது சொற்றொடர் பிரியாமலே இரண்டு பொருளைத் தருவது.

பிரிமொழிச் சிலேடை என்பது ஒரு சொல் அல்லது சொற்றொடரைப் பிரித்தால் **இரு பொருளைத் தருவது.**

இரட்டுறமொழிதல், அணி வகைகளுள் ஒன்றாகும். இவ்வணியைச் செய்யுளில் அமைத்துப் பாடுவதில் காளமேகப்புலவர் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். தற்காலம்வரை பலர் இரட்டுற மொழிதலில் பாடல்களை இயற்றியுள்ளனர்.

நூற்குறிப்பு ;

புலவர்கள் பலர் பல்வேறு தலைப்புகளில் பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு எனப்படும். சந்தக்கவிமணி என அழைக்கப்படும் தமிழழகனார் பாடிய இரட்டுற மொழிதல் தனிப்பாடல் திரட்டில் ஐந்தாம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும் கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது. இவற்றுக்குள்ள ஆற்றலும் விரிவும் ஆழமும் பயனும் தமிழுக்கும் உண்டு எனப் போற்றப்படுகிறது. தமிழ் கடலோடு ஒத்திருத்தலை இக்கவிஞர் இரட்டுற மொழிவதன் மூலம்தமிழின் பெருமையை ஆழமாகவும் விரிவாகவும் இந்நூலில் கூறுகிறார். தமிழை ஆழியோடு ஒப்புமைப்படுத்தும் பாடல் **ஆழிக்கு இணை**யாகும்.

ஆசிரியர் குறிப்பு :

இயற்பெயர் சண்முக சுந்தரம்.

பிறந்த தேதி 21-04-1929

பெற்றொர் தந்தையார்-வேலு, தாயார் வள்ளியம்மை

ஊர் தூத்துக்குடி

பெற்ற விருதுகள் பாரதிதாசன் விருது, கவிமாமணி விருது, சந்தக்கவிமாமணிவிருது, தமிழ்க்காவலர், தமிழ்ச்சுடர், கவிஞானி

இறப்பு 02-10-2015

**வினா**

தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக

தமிழ் ;

1. இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் தமிழ் வளர்ந்தது.

2. முதல், இடை, கடை என முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.

3. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.

4. சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

கடல் ;

1. இது முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.

2.வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.

3. மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது.

4. தன் அலையால் சங்கினைத் தடுத்தி நிறுத்திக் காக்கிறது.

இவ்வாறு தமிழழகனார் ஆழிக்கு இணையாகத் தமிழை இரட்டுற மொழிதல் மூலம் விளக்குகிறார்.

**பயிற்சி (Separate Paper)**

பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக (மதிப்பெண் 4)

குறிப்பு; கவிதையாகவோ அல்லது அழகிய வாக்கியங்களாகவோ 10 வரிகளுக்கு மிகாமல் அமைய வேண்டும்

